ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශේෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/77 - 2018 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2018.07.13

*2079/77 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 6/77* (ii)

**1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், குற்ற வழக்கிற்கு ஆளாகியுள்ள ஆட்களையும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களையும் கைமாற்றுதலை ஆளுகை செய்கின்ற இரு பக்க சட்ட உத்தியை தாபிப்பதற்கெனவும், தவறுகளைத் தடுப்பதிலும் அத்தகைய தவறுகள் தொடர்பில் தண்டனைகளை விதிப்பதிலும் பொருத்தனைக்கான அரச திறத்தவர்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தக்கூடியவாறு நீதியின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கெனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் வெளிநாட்டு அரசொன்றான துருக்கிக்கும் இடையே 2008, திசெம்பர் 02 ஆம் நாளன்று அங்காராவில் கைச்சாத்திடப்பட்டுள்ளபடியினாலும் ; பொருத்தனைக்கான திறத்தவர்கள் குற்ற வழக்கிற்காக அல்லது அவரது தண்டனைகளை நிறைவேற்றுவதற்கென தோதான அரச திறத்தவர்களின் ஆள்புல எல்லைகளினுள் கண்டுபிடிக்கப்படுகின்ற ஆட்களை வேண்டுகோள் விடுக்கப்பட்டதன்மேல், அத்துடன் பொருத்தனைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய அவற்றுக்கிடையே மீள ஒப்படைப்பதற்கு பொறுப்பேற்கின்றனரெனவும் ; அத்துடன் அத்தகைய பொருத்தனைகளின் ஏற்பாடுகள் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைவாகவுள்ளதெனவும் ; 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் பொருத்தனையில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திரிபு மட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு அமைவாக அத்தகைய வெளிநாட்டு அரசு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டுமெனவும் இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2018, யூன் 20.*

*07-959*

1A - PG 4124 — 437 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.